பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (05-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 40

# மக்களை மனித கேடயமாக அரச படை பயன்படுத்தியது

### தகர்ப்பு

கல்முனையில் உள்ள தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையமும் அதன் கோபுரமும் நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டதாக ''ரெலிக்கொம்'' வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் 600 தொலைபேசிகள் செயலிழந்தன; அரசுக்கு சுமார் 4 கோடி ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (உ-3-7-10)

உயர்தரப் பரீட்சையில் சாதனை!

## யாழ்.இந்துவில் 9 மாணவர் 4 பாடங்களிலும் "ஏ" சித்தி!

கொழும்பு, ஜன. 5

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட (''ஏ'') சித்தியைப் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 4 பாடங்களிலும் அதிவிசேட சித்தியை 18 மாணவர்கள் பெற்றிருந்தனர் என்பது தெரிந்ததே. இவர்களில் அரைவாசிப் பேர் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவர்கள் பொறியியல் துறையிலும், ஒரு மாணவன் மருத்துவத்துறையிலும் ''4'' பெற்றுள்ளார்கள். (உ-3)

## மட்டு.புதுக்குடியிருப்பு சம்பவம் குறித்து மனித உரிமைகள் அமைப்பு அறிக்கை

கொழும்பு. ஜனவரி 5

மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றின் போது அப்பாவிப் பொதுமக்களை ஸ்ரீலங்கா அரசுப் படைகள் மனித கேடயமாகப் பயன்படுத்தியுள்ளன. இதனால் 16 பொதுமக்கள் பலியானார்கள்.

மனித உரிமைகளுக்கான ஆசிரியர் அமைப்பு ஒன்று விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதால் கிடைத்த வெற்றியையும் —

கடுமையான செயதித் தணிக்கையையும் —

பயன்படுத்தி இந்தச் சம்பவத்தை அரசு மூடி மறைத்து விட்டது என்றும் அந்த அறிக்கையில் அரசு மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

பயணிகள் வந்த வாகனங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பாடசாலைகளில் யாழ். ஆசிரியர்கள் பணியேற்பு

கிளிநொச்சி, ஜன. 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்துள்ள ஆசிரியர்கள் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கிளிநொச்சிப் பாடசாலைகளில் பணியாற்றுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 416 ஆசிரியர்கள், அதிபர்கள் கரைச்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பணியாற்றுவதற்கு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

கடமையேற்கும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியசேவை 3 (II) இன் ஆரம்ப சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென வும்—

கடமை ஏற்பவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் முழு நேரமாக கடமையாற்ற வேண்டும் என்றும் பணிக்கப்பட்டிருந்தனர்.

அனேகமான ஆசிரியர்கள் இம்மாதம் முதலாம் திகதி தமக்குரிய பாடசாலைகளில் கடமையை ஏற்றுக் கொண்டனர். [அ-176]

## வடமராட்சியில் மூவர் பலாலி ஷெல்லுக்கு காயம்

வடமராட்சி, ஜன. 5

பலாலி இராணுவமுகாமில் இருந்து வடமராட்சிப் பகுதிகளை நோக்கி நேற்று காலையும், மாலையும் இரு தடவைகளாக மேற்கொள்ளப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் கட்டுப்பாட்டில் வருமாம்!

கொழும்பு, ஜன. 5

சுமார் 295 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள வலிகாமம் பகுதி முழுவதையும் இன்னும் இரண்டு, மூன்று தினங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

## பலாலியில் 4 படையினர் பலி

கொழும்பு, ஜன. 5

பலாலி முகாமுக்குள் ஊடுருவி நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர் என்றும்—

ஓர் அதிகாரி படுகாயமடைந்தார் என்றும்—

ஸ்ரீலங்கா அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பலாலிக்கு மேற்கே பெரியவிளான் பகுதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ டிரக் மீது புலிகள் கைக்குண்டு வீசித் தாக்கியதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## நியமனப் படிவம் தாக்கலாகும் திகதி அறிவிப்பு

நேற்று முன்தினம் கலைக்கப்பட்ட வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 18 முதல் 25 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என நேற்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா அறிவித்தார். (உ-3)

### பாதயாத்திரை

வவுனியாவில் இன்று கூட்டு சமாதான பாதையாத்திரை ஒன்று நடைபெறவிருக்கிறது.

மூன்று முறிப்பு பிள்ளையார் கோவிலில் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி வவுனியா போதிதசிறார் ராமய விகாரையை பாதயாத்திரை வந்தடையும் என அறிவிக்கப்படுகிறது.

பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவமதத் தலைவர்களின் அனுசரணையுடன் நடைபெறும் இந்தப் பாதயாத்திரையின் முடிவில் நடக்கும் கூட்டத்தில் அரசியல்வாதிகளும், இராணுவ, பொலீஸ் அதிகாரிகளும் உரையாற்றுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## வடமேல் மாகாண சபையையும் கலைப்பதற்கு சந்திரிகா திட்டம்?

கொழும்பு. ஜன. 5

வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளைத் தொடர்ந்து வடமேல் மாகாணசபையும் விரைவில் கலைக்கப்படலாம் என சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தலைமையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வடமேல் மாகாணசபையில் ஆட்சி அமைந்திருந்ததும்—

தொட்டலங்க குண்டு வெடிப்பில் காமினிதிஸநாயக்காவுடன் ஜி. எம். பிரேமச்சந்திரா உயிரிழக்க ஐ. ஐ. தே. முன்னணியின் லலித் பிரிவு ,பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்ததும் —

மற்றைய அணி ஐ. தே. கவின் ஆதரவுடன் வடமேல் மாகாணசபையில் ஆட்சியைக் கைப்பற்றியதும் தெரிந்தவையே.

எதிர்தரப்பிடம் எஞ்சியுள்ள வடமேல் மாகாணசபையையும்கலைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-6)

## இரசாயன ஆயுதங்களை புலிகள் பயன்படுத்தலாம்

### ஐ.நாவுக்கு அரசு முன்னறிவிப்பு

விடுதலைப் புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தும் சாத்தியம் இருப்பது குறித்து ஸ்ரீலங்கா அரசு ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவித்துள்ளதாம்.

இந்த விடயம் குறித்து ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் ஐ. நா. சபையில் உள்ள ஸ்ரீலங்கா நிலைய பணிப்பாளருடன் பேச்சு நடத்தினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி மக்களின் நலன் கருதி

## பருத்தித்துறையில் "உதயன்" கிளை நிலையம்

பருத்தித்துறை பழைய பஸ்நிலையச் சதுக்கத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச்சங்க அலுவலகங்கள் வன்னிப்பகுதியில் திறக்கப்படுகின்றன

சாவகச்சேரி, ஜன 5

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு சென்றவர்களுக்கு உதவுமுக மாக ப. நோ. கூ. சங்கங்கள் தமது துணை அலுவலகங் களை அங்கு திறக்க விருக்கின் றன.

கொழும்பில் இருந்து வாகன அணி மூலம் தேவை யான பொருள்களை வன் னிக்கு எடுத்து வர ஏற்பாடு செய்யுமாறு அந்தச் சங்கங் கள் மாகாண கூட்டுறவு ஆணையாளரைக் கேட்டுள் ளன.

கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வாகன அணி மூலம் வன்னிக்கு எடுத்து வரு வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி ஏற்பாடு செய்து தரு மாறும் மாகாண கூட்டுறவு ஆணையாளரை ப. நோ. கூ. சங்கங்கள் கேட்டுள்ளன.

(இ-3)

## காவிரிநீர் பிரச்சினை கர்நாடகத்தில் கலவரம்

காவிரி நீரிலிருந்து தமிழ் நாட்டுக்கு 600 கோடி கன அடி தண்ணீர் வழங்குவ தென்ற கர்நாடக மாநிலத் தின் முடிவை எதிர்த்து கர் நாடக மாநிலத்தின் நெற்களஞ்சியமானர் ''மாந்தியா'' மாநிலத்தில் விவசாயிகளும் கன்னட ஆதர வாளர்களும் நேற்று பல இடங்களில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

ரயில் ஒன்றையும் அவர் கள் தடுத்து நிறுத்தினார்கள்.

மத்திய பகுதியில் கடைகள் மூடப்பட்டிருப்பதாகவும் பெங்களூரில் தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்ற தாக 15பேர் கைது செய்யப் பட்டதாகவும் யு. என். ஐ. செய்தி தெரிவிக்கிறது

## வன்னிபெரும் நிலப்பரப்பில் நல்லின ஆடு, மாடு வளர்ப்பு

கிளிநொச்சி, ஜன. 5

வன்னி பெருநிலப்பரப்பில் நல்லின ஆடு, மாடுகளை அபிவிருத்தி செய்ய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நல் லின ஆடு, மாடுகளை தரு வித்து கால்நடை வளர்க்க விரும்புவோருக்கு அது விநி யோகிக்க உள்ளது. இவற் றைப் பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் முத லுதவிச் சிறுசிகிச்சை நிலை யங்களிலும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முதலுதவிச் சிறுசிகிச்சை நிலையங்களிலும், பொருண் மிய மேம்பாட்டு நிறுவன செயலககளிலும் உடனடி யாக பதிவு செய்து கொள்ளு மாறு கோரப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்பிழந்தவர் களுக்கு முன்னுரிமை அளிக் கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (இ)

## இடம் பெயர்ந்த ப. நோ. கூ. சங்கங்கள் எதிர் நோக்கும் நெருக்கடி

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள ப. நோ. கூ. சங்கங்கள் பல நெருக்க டிகளை எதிர் நோக்கியுள் ளன என்று கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் ப. நோ. கூ. சங்கங் கள் களஞ்சிய வசதி, தளபாட வசதி, காகிதாதி வசதிகள் இன்றி பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளன என் றும் —

அச்சிட்ட காகிதாதிகள் இன்மையால் அவை தமது பணிகளை செவ்வவே செய்ய முடியா நிலையில் உள்ளன என்றும் — தெரிவிக்கப்பட் டது.

ப. நோ. கூ. சங்களுக்கு தேவையான அலுவலக பத்தி ரங்களை அச்சிட போதிய வசதி இல்லை என்றும் தெரி விக்கப்பட்டது.

உ

அருள்மிகு உசன் கஜகேணி

## பிள்ளையார் ஆலய வருடாந்த கணபதி ஹோமம்

நாட்டின் நலன் கருதி நடைபெறும் ஹோமம் இவ்வருடமும் சிறப்பாகச் செய்வதற்கு கணபதி அருள்பாலித்துள்ளார்.

சிவஸ்ரீ கிரியாதத்துவாதி

★ இ. கேதீஸ்வரக் குருக்கள் ★

தலைமையின் கீழ் (06 – 01 - 1996) சனிக்கிழமை நடைபெபற இருப்பதால் அனைவரையும் கலந்து அருள்பெறுமாறு வேண்டுகிறோம்.

★ விசேட மங்களவாத்தியமும் இடம்பெறும்.

(39912)

## காப்புறுதி உத்தியோகஸ்தர் கூட்டம்

சாவகச்சேரி, ஜன. 5

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் சங்க யாழ். பிராந்திய அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10 திகதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக் கிறது.

வெளிக்கள உத்தியோகஸ் தர்களின் இன்றைய நிலை குறித்து இக்கலந்துரையா டலில் ஆராயப்படும்.

(அ-3)

## மலசலகூடங்கள் அசுத்த நிலையில்

மந்திகையில் இயங்கிவரும் யாழ். போதனா வைத்திய சாலையின் வார்ட்டுகள் சில வற்றின் மலசலகூடங்கள் அசுத்தநிலையிலேயே காணப் படுகிறன என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-15)

## பஸ் சேவை

பண்டிதர் குடியிருப்பு மக் களின் நலன் கருதி சிற்றூர்தி சேவையை ஆரம்பித்திருப்ப தாக தென்மராட்சி சிற் றூர்தி சேவை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பண்டிதர் குடியிருப்பில் இருந்து காலை 7 மணிக்கு சாவகச்சேரிக்கும் —

சாவகச்சேரியில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு பண்டிதர் குடியிருப்புக்கும் — இச்சேவை நடைபெறும். (இ-3)

## பாம்பு கடித்து ஒருவர் மரணம்

மந்திகை, ஜன. 5

பாம்புக்கடிக்கு உள்ளாகி மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் ஒருவர் நேற்று அதி காலை உயிரிழந்தார். மற் றொருவர் ஆபத்தான நிலை யில் அவசர சிகிச்சைக்குட் படுத்தப்பட்டார். சாவகச் சேரி கச்சாய் வீதியில் கடந்த முதலாம் திகதி இரவு பாம் பினால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த சவிரி தேவசகா யம் (வயது 49) என்பவரே இறந்தவர் ஆவார். இவர் சண்டிலிப்பாய் மாசியம்பதியி லிருந்து இடம் பெயர்ந்து வந்து இங்கு தங்கி இருந்தார்.

இதேவேளை நேற்று அதி காலை 2.00 மணியளவில் படுக்கையில் வைத்து பாம்பு தீண்டிய துரைசிங்கம் ராஜ ரமேஷ் (வயது 15) என்பவர் சுயநினை விழந்தநிலையில் இன்னும் இருந்து வருகிறார்.

இவர் அச்சுவேலிபத்தமேனி யில் இருந்து இடம் பெயர்ந்து கப்பூதுவில் வசித்துவருபவர். கப்பூதுவிலேயே பாம்பு இவ ரைக் கடித்தது.

(இ-15)

## நிவாரணம் வழங்குவதை துரிதப்படுத்த விசேட கிளை கிளிநொச்சியில் திறக்கப்படும்

வலிகாமம் பிரதேசத்திலி ருந்து இடம்பெயர்ந்தோருக் கான நிவாரணங்களை துரித மாக வழங்குவதற்காக விசேட ஏற்பாடு செய்யப் பட உள்ளது.

நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கென்றே விசேட கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்று திறக்கப்பட உள்ளது.

கரடிப்போக்குச் சந்தியில் உள்ள எரிபொருள் நிலையக் கட்டடத்தில் இந்த விசேட கூட்டுறவுச் சங்கக் கிளை விரைவில் திறக்கப்படும் அதற் கான ஏற்பாடுகள் இப்போது மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நிவாரணப் பொருள்கள் மக்களுக்குத் தாமதமின்றிக் கிடைப்பதற்கான பணிக ளைக் கண்காணிப்பதும் இக் கிளையின் பணியாக இருக் கும். (அ-76)

## ஆருத்திரா தரிசனம்

திருவெம்பாவை முடிவு தினமான இன்று சிவன் கோவில்களில் நடேசர் அபி ஷேகம் நடைபெறும்.

மார்கழி திருவாதிரையில் வரும் ஆருத்திரா தரிசனம் மிகச் சிறப்புடையதாகும்.

## இடமாற்றம்

## இராசா டீசல் என்ஜினியர்ஸ்

யாழ். 180, பருத்தித்துறை வீதியில் இயங்கிய இராசா டீசல் என்ஜினியர்ஸ் சாவகச்சேரி, கச்சாய் வீதி, 2 ஆம் ஒழுங்கையில் தற்பொழுது இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின் றோம்.

★ எமக்கு வேறு கிளைகள் இல்லை

(39915)

## மாகாணசபைகள் கலைப்பு: நீதிமன்றத்துக்குச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சி முடிவு

கொழும்பு, ஜன. 5

வடமத்திய மற்றும் சப்பிர கமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்டதை ஆட் சேபித்து சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐ. தே. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கி ரமசிங்க அறிவித்திருக்கின் றார்.

மாகாண சபைகள் கலைக் கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்றும் அவர் கூறினார்.

ஒருபுறம் நீதிமன்றத்துக் குக் சென்றாலும் மறுபுறம் தேர்தலை எதிர் நோக்க தமது கட்சிதயார் என்றும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட முதலமைச் சர்களைக் கலந்தாலோசிக் காது மாகாணசபைகளை ஜனாதிபதி கலைத்தது தவறு என்ற அடிப்படை யில் உயர்நீதிமன்றத்தில் ஐ. தே. க. மனு தாக்கல் செய் யும் என எதிர்பார்க்கப்படு கின்றது. (உ-3-7-10)

## பரி. யோவான் கல்லூரி

யாழ்ப்பாணம்

கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் இன்று (5 - 01 – 96) கணக்காளருடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படு கின்றீர்கள்.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு:-

க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேறுகள் யாழ். கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பின் மாணவர்கள் தங்களது பெறுபேறுகளை கீழ் உள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்

திருமதி சு. இராஜதேவன்
அணிஞ்சில் அடி, (துன்னாலை மேற்கு)
கரவெட்டி.

(கலிகைச் சந்தியில் இருந்து நெல்லியடி வீதியில் பெரிய மதவடியில் நீர்வேலி ப. நோ. கூ.சங்கம் கிளை 18க்கு முன்பாக) (40059)

## மந்திகையில் பணியாற்ற பணிப்பு

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் யாழ்ப்பா ணம் போதனா வைத்திய சாலை ஊழியர்களை நேற்று வியாழக்கிழமை தொடக்கம் மந்திகையில் இயங்கும் யாழ். வைத்தியசாலைக்கு கட மைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

பணிக்களத்தில் புதுமலராகி பத்து மாதங்கள் ஆகுமுன்பே இறைவனடி சேர்ந்த,

அருட்திரு

**கஸ்பார் ஜோண் லொறற்**

அடிகளாருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை யாக்குகின்றோம். இவரது பிரிவால் துயருறும் குடும் பத்தவர்கள், உறவினர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

புனித ஆசீர்வாதப்பர் ஆலய,
பங்குத்தந்தை, பங்குமக்கள்.

(39911)

உடன்படிக்கை

## திருவிருந்து ஆராதனை

காலம்: 07 - 01 - 1996
நேரம்: காலை 8-00 மணி
இடம்: மெதடிஸ்த தேவாலயம்,
பருத்தித்துறை.

யாவரும் அன்பாய் இணைந்து கொள்ளவும்.

அருட்திரு எஸ். எஸ். கருணைராஜ்
முகாமைத்துவக் குரு

மெதடிஸ்த திருச்சபை,
யாழ், சேகரம். (சி-3008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா அரசுக்கு 4 கப்பல்களில் நவீன ஆயுதங்கள் வருகின்றன

அதி நவீன ஆயுதங்கள், மற்றும் தாக்குதற் கலன்களை ஏற்றிய நான்கு கப்பல்கள் இம் மாதம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளன என ''சிலுமின'', சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

வானிலிருந்தும் கடலிருந்தும் தாக்குதலை மேற்கொண்டு புலிகளை அழிப்பதற்கு பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் குறிப்பிட்ட நிலப்பரப்பிலும் கடற்பரப்பிலும் மேற்கொள்ளப்படவிருப்பதால் கடற்படையினதும் விமானப்படையினதும் வலுவை அதிகரிக்க அரசாங்கம் முயற்சியெடுத்து வருகிறது என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆயுதங்களை ஏற்றிவந்த இரு கப்பல்கள் ஏற்கனவே கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

இவற்றில் ஏற்றப்பட்டு வந்த ஆயுதங்கள் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இறக்கப்படுவதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வானிலிருந்து தாக்குதலை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் கொங்கிறீட் மற்றும் இரும்பினால் அமைக்கப்பட்டுள்ள 'பங்கர்' களை அழிக்கவல்ல தாக்குதல் விமானங்களும் ஏற்கனவே வந்தடைந்துள்ளன எனவும்—

மிக விரைவில் பல ஹெலிக்கொப்டர்களும் வந்தடையவுள்ளன எனவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ-10)

## சமையல் பாத்திரங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஜன. 5

பளைப் பிரதேசத்தில் உள்ள நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கவென சமையல் பாத்திரங்களை, சிறுவர் பாதுகாப்பு நிதியம் தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளது. (இ-117)

## சிங்களவர் வெளியேற்றம்

சாவகச்சேரி, ஜன 5

அநுராதபுரம், புத்தளம் வீதியில் உள்ள பழைய புளியங்குளத்தில் விடுதலைப் புலிகள் பொலீஸார் மீது நடத்திய தாக்குதலின் பின் அப் பகுதியில் இருந்த சிங்களக் குடியேற்ற வாசிகள் அவசரம் அவசரமாக வெளியேறுகின்றனர்.

இப்படி வெளியேறும் போது லொறிச்சில்லில் சிக்கி பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டார். (இ-3)

## கொழும்பில் தமிழர்களை மிரட்டிப்பணம் சேகரிப்பு

ஸ்ரீலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுக்கள் கொழும்பில் உள்ள தமிழர்களை அச்சுறுத்தி அவர்களிடமிருந்து வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கான பாதுகாப்பு நிதியைச்சேகரிப்பதாக் வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது

நிதி உதவி செய்ய மறுக்கும் மக்களை. புலிப் போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ் சாட்டி பொலீஸாரிடம் ஒப்படைத்துவருகிறார்கள் எனவும்—

இதனால் பொலீசாரின் வன்முறைகளுக்கு அப்பாவித் தமிழர்கள் இலக்காகி வருவதாகவும் ''வெரித்தாஸ்'' வானொலி தனது செய்தியில் மேலும் தெரிவித்தது. (இ-10)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

சாவகச்சேரி, ஜன 5

திருகோணமலையில் உள்ள பன்குளம் விமானப்படை முகாம் மீது நடத்திய தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாட விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ 60 எம்.எம். வைபோட் மோட்டார் | — | 1 |
| ★ 60 எம்.எம். கொமாண்டோ மோட்டார் | — | 2 |
| ★ ஆர்.பி.ஜி. | — | 1 |
| ★ எம்.ஜி.ஏ. - 13 பி.எல் எம்.ஜி. | — | 1 |
| ★ ரி. 81 ரக எல்.எம்.ஜி. | — | 1 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. | — | 1 |
| ★ ஏ கே. துப்பாக்கி | — | 4 |
| ★ செற் | — | 1 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 18617 |
| ★ ஐ.எம். ரவை லிங்குடன் | — | 5000 |
| ★ நேட்டோ ரவை | — | 2500 |
| ★ 50 கலிபர் ரவை | — | 6 |
| ★ ஆர்.பி.ஜி. ஷெல் | — | 8 |
| ★ ஆர்.பீ.ஜி. புரெப்பெலர் | — | 3 |
| ★ 60 எம்.எம். ஷெல் | — | 85 |
| ★ 60 எம்.எம். பரா ஷெல் | — | 4 |
| ★ 60 எம்.எம். பூஸ்டர் | — | 35 |
| ★ சிக்னல் பரா | — | 3 |
| ★ கைக்குண்டு | — | 28 |
| ★ ஏ.கே. மகஸின் | — | 213 |
| ★ ரி 81 எல்.எம்.ஜி. ரம் மகஸின் | — | 6 |
| ★ ஏ கே.எல்.எம்.ஜி. ரம் மகஸின் | — | 8 |
| ★ வோக்கி | — | 2 |
| ★ தொலைநோக்கி | — | 1 |
| ★ குண்டு துளைக்காத கவச அணி | — | 1 |

(இ-3)

## உதவிப்பணம் வழங்க முடியாத நிலை

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் அஞ்சல் நிலையங்களில் திரவப்பணம் இல்லாததால் வழங்கப்படவில்லை.

திரவப்பணம் கிடைத்ததும் கொடுப்பனவுகள் பற்றி அறிவிக்கப்படும் என்றும்—

அதுவரை உதவிப்பணம் பெறுவோர் அஞ்சல் நிலையங்களுக்கு அலையவேண்டாமெனவும்— யாழ். மாவட்ட அஞ்சல் அதிபர் அ. க. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (இ-117)

## கடமை நேரம் அதிகரிப்பு

வடமராட்சி, ஜன. 5

மந்திகையிலுள்ள யாழ். போதனா வைத்திய சாலை சிற்றூழியர்களுக்கான கடமை நேரம் 8 மணித்தியாலயத்திலிருந்து 12 மணித்தியாலமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-173 15)

## பருவம் பிந்திப் பெய்யும் மழையால் பயிர்கள் பாதிப்பு

மந்திகை, ஜன. 5

பருவகாலம் தப்பிப் பெய்யும் மழையினால் விவசாயிகள் பெரு நஷ்டத்தை எதிர்நோக்குவதாக வடமராட்சி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலபோக மானாவாரி நெற் செய்கையை மேற்கொண்ட பல விவசாயிகள் உரிய காலத்தில் போதிய மழை பெய்யாது போனதால் நஷ்டம் அடைந்தனர்.

இப்படியானவர்களில் பலர் நெற் செய்கையைக் கைவிட்டு மேட்டு நிலப்பயிரான வெங்காயச் செய்கையை ஆரம்பித்தனர்.

பெரும்பாலான வெங்காயப் பயிர்கள் அறுவடை காலத்தை அண்மித்துள்ள இவ்வேளையில், பெய்துவரும் மழையினால், வெங்காயப் பயிர்கள் அழுகிப் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது (இ-15)

## மன்னாரில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

மன்னார் ஜன. 5

மன்னார் பகுதியில் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீர்வளச் சபையினால் காலை 6-00 முதல் 7-00 மணிவரை வழங்கப்படும் குழாய் தண்ணீரைப் பெற்றே மக்கள் தமது அன்றாட குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-31)

## கல்வி நிர்வாக மாற்றம் இங்கு உடனடியாக இல்லை

சாவகச்சேரி, ஜன. 5

கல்வி நிர்வாகத்தில் இம் மாதம் முதல் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புப் பணிகள் யாழ். மாவட்டத்தில் இப்போதைக்கு மேற்கொள்ளப்பட மாட்டாது என கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோட்டமட்டங்களில் இம் மாத ஆரம்பத்தில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படவிருந்தன.

தற்போதுள்ள நிலையில் அவற்றை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் —

வழமை நிலை திரும்பிய பின்பே அந்தப் பணி ஆரம்பிக்கும் எனவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள்:

## நாடாளுமன்றம் அங்கீகரித்த பின்பு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்

கொழும்பு, ஜன.5

இனப் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டுவர அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன இவை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட்ட பின்னர் பொதுமக்கள் அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளுமுகமாக சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். உள்நாட்டு, வெளிநாட்டு வியாபார வணிக உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தினா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தை புலிகளிடம் இருந்து மீட்டெடுத்துவிட்டதால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது என்று நினைக்க முடியாது என்றும் அவர் கூறினார். (இ-3)

## போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவு

### விரைவில் இயங்கும்

மந்திகையில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவும் விரைவில் இயங்க உள்ளது. இதற்கான ஆயத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மந்திகை ஆதார வைத்திய சாலை சத்திரசிகிச்சைக் களத்தில், யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவு இயங்குவதில் இருந்து வந்த சில சிக்கல்கள் நேற்று முன்தினம் இங்கு இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது தீர்த்து வைக்கப்பட்டன.

மந்திகை வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவு டாக்டர் குழுவும், யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவு டாக்டர் குழுவும் நடத்திய இக்கலந்துரையாடலில் இதற்கான தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கமைய மந்திகை அரசினர் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் களத்தில் ஒருபகுதி தற்போது யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு ஒதுக்கிகொடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் களத்தை இயங்க வைப்பதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு அப்பிரிவுக்குரிய சத்திரசிகிச்சைக்குரிய சகல உபகரணங்களும் பொருத்தப்படுகின்றன.

இவ் வேலைகள் முடிவடைந்ததும் சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### ஒப்பந்தகாரர்

தமிழீழ நிர்வாக சேவையில் மரத் தளபாடங்கள் வழங்கல் வேலைக்கு பதியப்பட்ட சகல ஒப்பந்தகாரர்களையும் தமிழீழ நிர்வாக சேவைக்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# வடக்கிலிருந்துபடைகளை கிழக்கே நகர்த்த நேரிடும்

## புலிகளின் தாக்குதல் தீவிரமடைவதால்

வடக்கில் உள்ள துருப்பினரில் கணிசமான எண்ணிக்கையினரை கிழக்கே நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் இராணுவத்துக்கு ஏற்படும் என்று—

பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் பிரெஞ்சு செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் அமல் ஜெயசிங்கா தெரிவித்துள்ளார்..

கிழக்கில் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதால் அரசு தனது துருப்புகளில் கணிசமான எண்ணிக்கையினரை வடக்கிலிருந்து கிழக்குக்கு மாற்ற வேண்டி வரும்—

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அவர்கள் பல இடங்களில் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதனால் கிழக்கில் பெரும் பதற்றநிலை உருவாகியுள்ளது —

கிழக்கில் பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் நடமாடுகின்றனர் என்ற எண்ணம் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ளது —

விடுதலைப் புலிகள் தமது பலத்தைக் கிழக்கில் வலுவாக்குவதற்கும், தாக்குதல்களை நடத்துவதற்குமான தந்திரோபாயங்களை [illegible] வருகின்றனர் — என்று ஜெயசிங்கா மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி, மாலைதீவு இனங்கள் விற்பனைக்குண்டு. மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. (39896)

### தேவை

கந்தோர் மேசை, இரண்டு லாச்சி மேசை, அலுமாரி, செற்றி, பின்னல் செற்றி செற் தேவை. தொடர்பு: வே. த. மனோகரன், திருக்குற்றாலம், சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (39784)

### தவறிவிட்டது

முத்துவேற்பிள்ளை நடேசன் ஆகிய எனது பிரயாணப் பைகள் முக்கிய ஆவணங்களுடன் 16-11-95 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மு. நடேசன், மே/பா ச.பேரம்பலம், சங்கீத ஆசிரியர், உசன், மிருசுவில் என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அறிவிக்கவும். அல்லது அனுப்பவும். சன்மானம் வழங்கப்படும். (39793)

### வீடு தேவை

ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தாருக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. நல்ல முற்பணமும் வாடகையும் வழங்கப்படும். தொடர்பு: றொலெக்ஸ் ஹோட்டல், கச்சாய் வீதி, சாவகச்சேரி. (39908)

### படிவங்கள்

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றப்பத்திரம், (D. Form.) மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்கான பிரவேச விண்ணப்பப் படிவங்கள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சோதி அச்சகம், மக்கள் கடை அருகாமை, கச்சாய் வீதி, சாவகச்சேரி, (39910)

### விற்பனைக்கு

பஜாஜ் ஸ்கூட்டர், இரண்டு வயது யேசி நாம்பன் ஒன்றும் விற்பனைக்குண்டு. இ. நவரத்தினராசா, ஆடியன்பிட்டி ஒழுங்கை, (யூனியன் பேக்கறி அருகில்), யாழ் வீதி, சாவகச்சேரி. (39907)

### அடையாள அட்டை

அடையாள அட்டை கவரிடவும் போட்டோ பிரதி களைப் பெறவும் சிறந்த இடம்: கிளீன்கட், நீதிமன்று அருகாமை, சாவகச்சேரி. (39857)

## விடுதலையின் வேளை
## தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள்

பாவம், சாபம், வியாதி ஆகியவற்றிலிருந்து தெய்வீக சுகம்பெற

1996 ஜனவரி 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில்

அசெம்பிளி ஒப் கோட். சாவகச்சேரி.

[மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி அருகில்]

மாலை 4-00 மணிக்கு நடைபெறும்

யாவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

(39899)

## தேடுகின்றார்கள்

திருமதி அன்னலட்சுமி சோமசுந்தரம்
(ஆசிரியை)

பாலசுப்பிரமணிய வித்தியாலயம் ஆனைக்கோட்டையில் கடமையாற்றியவரை, அவரது கணவரும் மகளும் தேடுகின்றார்கள்!

தகவல் தரவேண்டிய முகவரி:-

அருட்சகோதரி - கொறற்றி,
(அன்பின் சகோதரிகள் சபை)
வேளாங்கன்னி ஆலயம்,
முகமாலை.

(39909)

## ST. PATRICK'S COLLEGE JAFFNA

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியிலுள்ள மாணவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் வசதியான ஓரிடத்திற்குச் சென்று தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

பருத்தித்துறை - புனித அந்தோனியார் ஆலயம்
மட்டுவில் - லூர்து அன்னை ஆலயம்
மிருசுவில் - புனித நீககிலார் ஆலயம்
தாளையடி - புனித அந்தோனியார் ஆலயம்

பதிவுக்கான நாள்கள்:

7 - 1 - 96 ஞாயிறு
8 - 1 - 96 திங்கள்

நேரம்: காலை 9.00 — 12.00

அதிபர்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

(39791)

## தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளை அவசரமாகச் செய்ய வேண்டுமா?

சிரமப் படாதீர்கள்.

குறித்த நேரத்தில், சிறந்த முறையில் அவ்வேலைகளை நாம் செய்து தருவோம்.

★ றோணியோ தட்டச்சு

வேலைகளையும் நாம் பொறுப்பேற்கிறோம்.

## உதயன்
### கிளை நிலையம்
### சாவகச்சேரி

மேல்மாடி,
நவீன சந்தை, சாவகச்சேரி.

## வடமராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி

புத்தாண்டில்

# சேரன் பல்பொருள் வாணிபத்தின்

## மற்றுமோர் கிளை மந்திகையில்

## ஆரம்பம்:

# 05-01-1996 வெள்ளிக்கிழமை
# காலை 7-00 மணி

மந்திகை மருத்துவமனை நோயாளர்களின் நலன் கருதி மருந்துப் பொருள்களையும், ஊட்டச்சத்துப் பொருள்களையும் தரமான, மலிவான விலையில்

## வழங்க வருகின்றான்:

# சேரன் பல்பொருள் வாணிபம்

## மந்திகை.

(சி/3105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதிய கைவரிசை

அரசாங்கப் படைகள், கொழும்பு மற்றும் தென்னிலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது தாம் நடத்தும் கெடுபிடிகளில் புதிய 'கைவரிசை' ஒன்றையும் சேர்த்துள்ளன.

தென்னிலங்கை வாழ் தமிழ் மக்களை ஆயுதப்படையினரும், பொலீஸாரும் அடிமைகளிலும் கேவலமாக நடத்திவருவது ஏற்கனவே உலகம் அறிந்த ஒன்று.

பகலும் இரவுமாக பால், அந்தஸ்து, வயது வேறுபாடின்றி தமிழ் மக்களை, காரணமின்றிக் கைது செய்து —

பொலீஸ் நிலையங்களிலும், தடுப்பு நிலையங்களிலும், நாட்கணக்காகத் தடுத்து வைத்து மிகக் கொடியமுறையில் இம்சிக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் ஊடுருவுகிறார்கள், பாதுகாப்பு முன்னேற்பாடு என்ற சாட்டுக்களைக் காட்டி, தமிழர்கள் கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளிலும் வதைக்கப்படுகிறார்கள்.

அவை போதாது என்று கருதி, இப்போது இராணுவக்குழுக்கள் பாதுகாப்பு நிதிக்கு பணம் தருமாறு தமிழர்களைக் சட்டாயப்படுத்துகின்றன மிரட்டவும் செய்கின்றன. பணம் கொடுக்க மறுப்பவர்களை புலிச்சந்தேக நபர்கள், விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் என்று கூறிக் கைது செய்து பொலீசாரிடம் ஒப்படைக்கின்றன.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் நடத்தும் போர்ச் செலவுகளுக்கென்றே பாதுகாப்பு நிதியை அரசு திரட்டுகிறது. போர் தமிழர் இனப்படுகொலையை பிரதான இலக்காகக் கொண்டது.

ஆனால் —

வெளிஉலகத்தில் — சர்வ தேசங்களில் — தான் நல்ல பெயர் எடுப்பதற்காக சிங்களப் பகுதிகளிலும் தமிழர்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்வதாக அரசு பிரசாரம் செய்கிறது. ஜனநாயகப்பண்புகளைப் பேணும் விதத்தில் தமிழர்கள் நியாயமாக நடத்தப்படுவதாகப் பொய் கூறுகிறது.

தமிழர்களைக் கொல்வதற்கு, அவர்களின் உடைமைகளை அழிப்பதற்கு, தமிழர்களிடமே பணம் பறிக்கும் அநியாயம் இதுவாகும்!

ஏற்கனவே தமிழ் மக்கள் செலுத்தும் வரி வகைளால் பெறப்படும், நிதியை மறைமுகமாக— கண்ணுக்குத் தெரியாமல் — போர்ச் செலவுகளுக்கு அரசாங்கம் ''சுவீகரித்து''க் கொள்கிறது.

அது போதாதென்று இப்போது பகிரங்கமாகவும், நேரடியாகவும் தமிழர்களைக் கொல்வதற்கு அவர்களிடமே கப்பம் வாங்கப்படுகிறது!

தமிழர்கள் என்றால் அவர்களை எதுவும் செய்யலாம், கேட்பதற்கு யாருமில்லை என்ற சிந்தனையுடனேயே அரசாங்கத்தினரும் அதிகாரிகளும் குறிப்பாக ஆயுதப் படையினரும் இவ்வாறு அடாவடித் தனமாக நடந்து கொள்கின்றனர். சண்டித்தனம் செய்கிறார்கள்!

வடபகுதியை விட்டு வெளியே சென்று சிங்களப் பகுதிகளில் வாழ்ந்தால் சௌகரியமானது என்று நினைக்கும் தமிழர்களுக்கு இது நல்லதொரு பாடமாகும்.

செத்தாலும் தன்மண்ணில் வாழவேண்டும் என்ற கொள்கை எல்லாத் தமிழர்களுக்கும் இருந்தால், சிங்களவர் மத்தியில் வாழ்ந்து இப்படி இம்சைப்பட வேண்டியதில்லை.

# 1997 ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை; புதிய பாடத்திட்டம் குறித்து அறிவிப்பு

ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்துக்கமைவாக, 1997ஆம ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம், சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதென பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் திரு. யூ. எம். அபயவர்தன அறிவித்துள்ளார்.

★ உயிரியல் பாடத்தில் தோற்றவிருக்கும் மாணவர்கள் இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களுக்கு மேலதிகமாக நான்காவது பாடமாக பின்வரும் பாடங்களில் ஒன்றை கற்றிருப்பின் பல்கலைக்கழக அனுமதியின் பொருட்டு மருத்துவப் பயிற்சிக்கான தகுதியைப் பெறலாம். அவையாவன: தாவரவியல், தூயகணிதம், கணிதம் ஆகும்.

★ பௌதீகவியல் படிக்கும் மாணவர்கள் கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.

★ வர்த்தகக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் கணக்கியல், வர்த்தகக்கல்வி (வர்த்தகமும் நிதியும்), பொருளியல் போன்ற பாடங்களுக்கு மேலதிகமாக நான்காவது பாடமாக தற்போது அனுமதிக்கப்பட்ட பாடங்களுக்கு மேலதிகமாக கணிதம், வியாபார புள்ளி விவரவியல் ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

★ கலைத்துறையில் கற்கும் மாணவர்கள் தற்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாடங்களுக்கு மேலதிகமாக கணிதம், வியாபார புள்ளி விபரவியல் ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். (இ-118)

## விரிவுரையாளர் பட்டதாரி மாணவர் கூட்டம்

கணித புள்ளிவிவரவியல் துறையைச் சார்ந்த விரிவுரையாளர்களுக்கும் மூன்றாம், நான்காம வருட சிறப்புப் பட்டதாரி மாணவர்களுக்குமான கூட்டம் ஒன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முறையே மு. ப. 10 மணிக்கும் 11 மணிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஐந்து மாவீரர்களின் பெற்றோருக்கு அழைப்பு

பின்வரும் மாவீரர்களின் பெற்றோர்களை அல்லது உரித்துடையோரை கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள தென்மராட்சிக் கோட்ட மகளிர் அமைப்புச் செயலகத்தில் சந்திக்கும் படி யாழ். மாவட்ட மாவீரர் பணிமனையினர் கேட்டுள்ளனர்.:-

★ லெப்டினன்ட் வேல்விழி (சோமசுந்தரம் சர்மா சமாத்தீஸ்வரி — ஆவரங்கால்).

★ லெப்டினன்ட் மைவிழி [யாசோ கோகிலவதனி அமலதாஸ் — நிலாவேளி, கந்தர்—மடம்].

★ லெப்டினன்ட் நங்கை [சதீஸ்வரி சிதம்பரப்பிள்ளை நீர்வேலி].

★ லெப்டினன்ட் துஜி அல்லது முல்லை — (தனுசியா ஞானசேகரன் — ஆவரங்கால்).

★ கப்டன் பத்மினி (தயாவதி மயில்வாகனம் — சுன்னாகம்).

★ 2 ஆம் லெப்டினன்ட் சூட்டி — (சுப்பிரமணியம் விமலாதேவி — மாவடி — மூளாய் றோட், வட்டுக் கோட்டை). (உ)

## ஞாபகார்த்த பிரார்த்தனை

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பூசையும், கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற உள்ளன.

சேவாச்சிரமத்தைச் சேர்ந்த செல்வன் சிதம்பரநாதன் ஜெயானந்தன் வீரச்சாவடைந்ததையிட்டு, அவரது ஞாபகார்த்தமாகவே விசேட பூசையும், கூட்டுப் பிரார்த்தனையும் இன்று இடம்பெறவுள்ளன

## யாழ். பிரதம தபாலக கொடுப்பனவுக் கிளை இயங்க முடியாத நிலை

யாழ். மாவட்டத்தில் திரவப் பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், யாழ். தபாலக கொடுப்பனவுக் கிளை இயங்கமுடியாத நிலையில் இருந்து வருவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். தபாலகத்துக்கு ஏராளமான மணியோடர்கள் வந்து சேர்ந்துள்ளபோதும் — திரவப்பணம் இல்லாத காரணத்தால் கொடுப்பனவுக் கிளையை திறக்கமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மக்களுடன் புலிகளும் யாழ். வந்து விடுவராம்

### பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம்

கொழும்பு, ஜன. 5

இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முற்பட்டால் அவர்களுடன் விடுதலைப்புலிகளும் நகருக்குள் ஊடுருவி இராணுவம் மீது தாக்குதலை மேற்கொள்ள முறற்சிக்கலாம். இப்படி பாதுகாப்பு அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில் தற்போது எஞ்சியுள்ள 35 ஆயிரம் படையினருக்கு தேவைப்படும் பொருள்கள் ஆகாயமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் —

யாழ். நகருக்கான தரை வழிப்பாதை தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## முகாமில் தங்கியுள்ளோர் எண்ணிக்கை குறைகிறது

### பலர் வன்னிக்குப் பயணம்

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளில் முகாம்களில் தங்கியுள்ளோர் எண்ணிக்கை குறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

முகாம்களில் உள்ளவர்களில் பெரும்பான்மையானோர் வன்னிக்கு இடம்பெயர்வதன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி எடுக்கப்பட்ட கணிப்பில் 44 ஆயிரத்து 552 பேர் முகாம்களில் தங்கியிருந்தனர்.

கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட கணக்கின்படி இது 38 ஆயிரத்து 539 ஆக குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாம்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

## மீட்புநிதி கடன் மீளல் நேர அட்டவணை

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு நடைபெறும் இடங்கள் குறித்த நேர அட்டவணையை, விடுதலைப் புலிகள் நிதித்துறை விடுத்துள்ளது.

அட்டவணை வருமாறு:-

| | | |
|---|---|---|
| 06 - 01 - 1996 | | சனிக்கிழமை |
| சாவகச்சேரி | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை. |
| சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி | — | திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம். பி.ப. 2-00 — பி.ப 4 00 வரை. |
| 07 - 01 - 1996 | | ஞாயிற்றுக்கிழமை |
| பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு | — | வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை. |
| கரவெட்டி | — | திருஇருதயக் கல்லூரி, நெல்லியடி. பி.ப. 2-00 — பி.ப. 4-00 வரை. |
| 08 - 01 - 1996 | | திங்கட்கிழமை டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. |
| நல்லூர் | — | மு.ப. 9-00 — மு.ப. 12-00வரை. |
| உடுவில் | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை. |
| 09 - 01 - 1996 | | செவ்வாய்க்கிழமை டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. |
| கோப்பாய் | — | மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை. |
| தெல்லிப்பளை | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை. |
| 10 - 01 - 1996 | | புதன்கிழமை டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. |
| யாழ்ப்பாணம் | — | மு.ப. 9 00 — மு.ப. 12-00 வரை. |
| மானிப்பாய் | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை. |
| 11 - 01 - 1996 | | வியாழக்கிழமை டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. |
| சங்கானை | — | மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| காரைநகர், வேலணை | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை. |

## தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு நடைமுறைகள்

1995ஆம் ஆண்டுக்கான தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு தொடர்பான நடைமுறைகளை தமிழீழ நிதித்துறை அறிவித்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

1. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கடன் பத்திரத்தை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற்கட்டமாக நடைபெறும்.
   ஆ) கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களுக்கு மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும். இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை தயவு செய்து கருத்திற்கொண்டு எம்முடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களை பணிவன்புடன் வேண்டுகிறோம்,
2. கடன் பத்திரதாரர்கள் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
3. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகை தரவேண்டும்.
4. கடன் பத்திரதாரர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   அ) இறப்புச் சான்றிதழ்
   ஆ) இறப்புச் சான்றிதழின் பிரதி
   இ) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   ஈ) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்
   உ) கடன் பத்திரம்
5. கடன் பத்திரத்திலுள்ள முழுப்பெயரும், அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
6. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்கள் தமது அடையாள ஆவணத்தை காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
   ஆ) அடையாள ஆவணம் அற்றவர்கள் தமது புகைப்படத்தை (2.5 அங்X2 அங் அளவு) அதன் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக் கொள்ளப்படும்.
   இ) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்பு, கடன்பத்திரத்தைத் தவறவிட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின்போது மேற்கொள்ளப்படும். இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி

சிறுப்பிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் தற்போது கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 04-01-1996 அன்று அமரராகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா சேதுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், திருமதி தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (சுவிஸ்), மகேஸ்வரி, மாசிலாமணி (சுவிஸ்), சந்திரலீலா (கனடா), கணேசகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகலோகராஜா (சுவிஸ்), பரமேஸ்வரன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), கதிர்காமநாதன் (சுவிஸ்), இலட்சுமிகாந்தன் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும், ஐனோயா, அசோயன், ஜிவிதா, கார்த்திகா, அபீரன், அஜீர், அனிஷன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-1-96) மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன்
(பேபி) மகள்

தற்போதைய முகவரி:-
மடத்தடி,
கண்டி வீதி,
கொடிகாமம்.

(39795)

## திருமதி யோகம்மா ஆறுமுகம்

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யோகம்மா ஆறுமுகம் அவர்கள் லண்டனில் 28-12-95 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகரும்,நோத் சிலோன் ரேடர்ஸ் உரிமையாளருமாகிய திரு இராமலிங்கம் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு திருமதி முத்துவேலுப்பிள்ளையின் அன்புப் புதல்வியும், சிவயோகம், யோகராணி, ஆனந்தன் (U. K.), பிரமானந்தன் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலநாயகம், சண்முகராசா, றஞ்சி (U. K.), கோமதி (U. K.) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜன், சுசி, சிவபாலன் (கனடா), ரூபன், லோஜி (U. K.), சுதா, ஜெனி (U. K.),சுனில்(U.K), நிக்கலா (U. K.), அஞ்சலா (U. K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாருகாவின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற பொன்னாபரணம், கனகசபாபதி (U. K.), சபாரத்தினம், பூபதி (U. K.), காலஞ்சென்ற றாயூ ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 31- 12- 1995 இல் லண்டனில் நடைபெற்றன இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. சி. சண்முகராசா (மருமகன்)
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

தற்போதைய முகவரி:-
C/o. திரு. செ. செந்தில்மணி,
கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.

(39913)

## செல்வி இந்திராணி செல்லையா

20, கச்சேரி நல்லூரடியைச் சேர்ந்த செல்வி இந்திராணி செல்லையா 4 - 1 – 96 வியாழக்கிழமை கோவிலாக்கண்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பகவதி தம்பதிகளின் அன்பு மகளும், பேபி சறோஜா [பேபி] உருத்திரலிங்கம் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருளானந்தம் சறோஜினியின் மைத்துனியும், யசிந்தன், சுபாசினி, ஜனனி ஆகியோரின் பெரியதாயாரும், திருமதி வேலுப்பிள்ளை, அன்னபூரணம், முத்துக்குமாரு, பாக்கியவதி ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பரமசிவத்தின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [5 - 1 - 96] காலை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. அருளானந்தம்
[மைத்துனர்]

மகாலஷ்மி பாடசாலை அருகே,
கோவிலாக்கண்டி,
கைதடி.

[39796]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்ச் லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 05-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

### இரசாயன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசனையடுத்து —

சட்ட விரோதமான ஆயுதம் என ஐ. நாவினால் கணிக்கப்பட்டுள்ள இரசாயன வாயுவைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்பட்டால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து ஐ. நாவின் ஆலோசனையை ஸ்ரீலங்காப் பிரதிநிதி கோரியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### மக்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை வழிமறித்து அதில் — பயணிகள் போல் உடையணிந்தவாறு — ஏறிய விசேட அதிரடிப் படையினர் அவற்றை மோதல் நடத்திய இடத்துக்குச் செலுத்தும்படி பணித்தனர் என்றும் —

அங்கு பயணிகளை வாகனங்களை விட்டு இறங்கவிடாது மறித்து மனிதகேடயமாக வைத்துக்கொண்டு அவற்றில் இருந்தபடியே ஜன்னல்கள் ஊடாா புலிகள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும்—

பயணிகளை ஏற்றிவந்த மினிபஸ் ஒன்றே இம்மோதலில் மோசமாகப் பாதிக்கப்பட்டது என்றும் —

மோதலின் போது அதிலிருந்த 16 பொதுமக்களும் 4 படையினரும் உயிரிழந்தனர் என்றும்—

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண மக்கள் இராணுவத்தை வெறுக்கின்றனர்; புலிகளை விரும்புகின்றனர் என்றும் அந்தஅறிக்கை தெரிவித்தது.

தாம் கைப்பற்றிய வலிகாமம் பகுதிக்கு மக்களைத் திரும்புமாறு ஸ்ரீலங்கா அரசு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கையில் இந்த அறிக்கை வெளியாகியிருப்பது அரசுக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி 5 ஆம் திகதி மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு அதிரடிப் படை முகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்ட போது இடம்பெற்ற சம்பவத்தையே மேற்படி மனித உரிமைகள் அமைப்பு தனது அறிக்கையில் விவரித்துள்ளது.

### வடமராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்தனர்; சில வீடுகளும் சேதமடைந்தன.

ஷெல்கள் தொண்டமானாறு, கெருடாவில், ஊரிக்காடு பகுதிகளில் விழுந்து வெடித்தன.

மாலை 4. 45 மணிக்கு ஏவப்பட்ட ஷெல்கள் கெருடாவில் கொத்தியகாடு பகுதியில் விழுந்து வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது வல்வெட்டித்துறை பேக்கரி ஒன்றில் வேலைசெய்பவரான கந்தசாமி லோகேஸ்வரன் [வயது 17] என்பவர் அப்பகுதிக்கு பாண் விற்பனைக்காக சென்றவேளை வீதியில் காயமடைந்தார். இவர் ஊரெழுவில் இருந்து இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறையில் வசிப்பவராவார்.

கொத்தியகாட்டைச் சேர்ந்தவரான குமாரசாமி சிருஷ்ணசாமி (வயது79] என்பவர் தமது வீட்டில் இருந்து எதிர் வீட்டுக்கு போகும் போது வீதியில் காயமடைந்தார்.

இதேவேளை தொண்டமானாறு காட்டுப்புலம் பகுதியில் தோட்டத்தில் விழுந்த ஷெல்லினால் தோட்டத்தில் வேலை செய்துகொண்டு நின்றவரான இரத்தினம் தயாளகுமாரி (வயது 37) என்ற பெண் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15-[illegible])

## ஐந்து வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணத்தில் கடந்த 27 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் ஐந்து பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் தமிழினி (இரத்தினம் மலர்விழி — ஒட்டுசுட்டான்). 2 ஆம் லெப்டினன்ட் வாசுகி (நடராசா ரஞ்சினி — வரணி), 2 ஆம் லெப்டினன்ம் இசையருவி (ஆறுமுகட் மோகனராணி — காரைநகர்), லெப்டினன்ட் துலாஞ்சினி (நுரைராஜா வசந்தகுமாரி — நீர்வேலி), லெப்டினன்ட் காந்தி (தேவதாசன் ராணி — உடையார்கட்டு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

# மரண அறிவித்தல்கள்

## நவரத்தினம் விமலநாதன்

(அண்ணா தொழிலகம், இணுவில்)

ஏழாலை கிழக்கு சாரதா இல்லத்தைச் சேர்ந்த நவரத்தினம் விமலநாதன் நேற்று (04-01-96) காலமானார்.

அன்னார் நவரத்தினம் - மகேஸ்வரியின் அன்பு மகனும், சாரதாதேவி, சோதிநாதன் (கனடா), சிவாநந்தன் (சவுதி), தயாபரன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், வேலாயுதபிள்ளை (கமநல சேவை திணைக்களம் - யாழ். மாவட்டம்), யோகீஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-1-96) பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. வேலாயுதபிள்ளை
(மைத்துனர்)

தற்போதைய முகவரி:
மே/பா. ரி. சிவானந்தன்,
பெரிய அரசடி,
சங்கத்தானை.

(30798)

## திருமதி முத்துமணி முத்துக்குமாரு

(நல்லம்மா)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், தற்போது புலம் பெயர்ந்து புலோலி தெற்கில் வசித்தவருமான நல்லம்மா அவர்கள் [03 - 01 – 96] புதன் அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துக்குமாரு [தபாலதிபர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்தையா தம்பதிகளின் மகளும், அன்னம் [Malaysia], காலஞ்சென்றவர்களான சின்னையா, கனகரத்தினம், கந்தசாமி, செல்லம்மா அகியோரின் சகோதரியும், திருமதி சா. தனலக்சுமியின் அன்புத் தாயாரும், சங்குவேலியைச் சேர்ந்த சாம்பசிவம் [இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்] அவர்களின் மாமியாரும், உஷா இரத்தினகோபால் [U. K ], வினேபா [கணக்காளர்-Maldives], கீதா நித்தியானந்தன் [France], Dr. சுதன் [யாழ். போதனா வைத்தியசாலை], Dr. இரத்தினகோபால் [U. K.], நித்தியானந்தன் [கணக்காளர், (France) ஆகியோரின் பேர்த்தியும், ரஞ்சன், ரமணி, நிரேஷ், ஜெயண்ட், டனலக்சுமி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [03 - 01 - 96] புதன் மாலை புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உறவினர்கள், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ச. சாம்பசிவம்
[மருமகன்]

C/o திரு. G. M. இராமச்சந்திரன்,
[பொது முகாமையாளர், புலோலி ப.நோ.கூ.ச]
உபய கதிர்காமம்,
புலோலி தெற்கு.

(39794)

## M. S. சிதம்பரப்பிள்ளை

(இளைப்பாறிய லிகிதர், கல்வித் திணைக்களம்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வதிவிடமாகக் கெண்டவரும், தற்போது நுணாவிலில் வசித்தவருமாகிய மணியர் சின்னையா சிதம்பரப்பிள்ளை 4 - 1 – 96 அன்று காலமானார்.

அன்னார் நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், சாரதாதேவி (கொழும்பு), பாலசரஸ்வதி (கனடா), பாலகிருஷ்ணன் (ஆசிரியர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி). கதிரமலைநாதன் [ஜேர்மனி], சித்திரா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற விக்கினராஜா, சிவநேசன் [ஓய்வுபெற்ற ஆசிரியர், கனடா], நகுலாம்பாள், ராஜினி (ஜேர்மனி], ஜெயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, நிதிபன், மாதங்கி, மைத்திரேயி, சாயிபிரகலாதன், வித்யா, மகிணன், மயூரன், துசி, கோகுலன், கார்த்திகா, கஸ்தூரி, சாதனன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி தங்கமுத்து, திருமதி கதிரமலை, திருமதி செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சம்பந்தநாதர், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், தம்பிஐயா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5- 1- 96) காலை 11. 30 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
சி. பாலகிருஷ்ணன்:
(மகன்)

தற்போதைய முகவரி:
மே/பா திரு. தம்பிஐயா,
120, கண்டி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(39797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org